**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.262** **நாள் : 11.09.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நாளை (12.09.2025) 10 வார்டுகளில் நடைபெறவுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நாளை (12.09.2025) மாதவரம் மண்டலம் (மண்டலம்-3), வார்டு-27ல் மாதவரம் பால் காலனி, காமராஜர் சாலை, திருஞானசம்பந்தம் திருமண மண்டபம், தண்டையார்பேட்டை மண்டலம் (மண்டலம்-4), வார்டு-43ல் கும்மாளம்மன் கோயில் தெருவில் உள்ள சமுதாயக் கூடம், இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-63ல் புதுப்பேட்டை, சந்திராபானு தெருவில் உள்ள நாதமுனி திருமண மாளிகை, அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்-7), வார்டு-82ல் ஒரகடம், எம். மல்லிகா மஹால், அண்ணாநகர் மண்டலம் (மண்டலம் – 8), வார்டு-95ல் வில்லிவாக்கம், எம்.டி.எச். சாலையில் உள்ள டி.கே.ஏ. திருமண மண்டபம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்–9), வார்டு-112ல் புலியூர் 2வது பிரதான சாலையில் உள்ள டிரஸ்ட்புரம் விளையாட்டு மைதானம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம் – 10), வார்டு-130ல் வடபழனி, அம்மன் கோயில் தெரு, SIMS மருத்துவமனை அருகிலுள்ள மாநகராட்சி விளையாட்டு திடல், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம் – 11), வார்டு-150ல் காரம்பாக்கம், சென்னை நடுநிலைப்பள்ளி அருகிலுள்ள செட்டியார் அகரம் காலிமனை, ஆலந்தூர் மண்டலம் (மண்டலம் – 12), வார்டு-157ல் **ஆற்காடு** சாலையில் உள்ள **சான்றோர் அரங்கம்**, அடையாறு மண்டலம் (மண்டலம் – 13), வார்டு-171ல் ராஜா அண்ணாமலைபுரம், காமராஜ் சாலையில் உள்ள ஜெ. ஜெ. சமுதாயக் கூடம் ஆகிய 10 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு** : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.